**மே – 16**

# TNPSC துளிகள்


- திருநெல்வேலியைச் சேர்ந்த திருநரான ரேணுகா என்பவர், வருடாந்திர கூத்தாண்டவர் விழாவையொட்டி விழுப்புரத்தில் நடைபெற்ற அழகிப் போட்டியில் கூவாகம் அழகிப் பட்டத்தினை வென்றார்.
- முன்னாள் பாதுகாப்புத் துறைச் செயலாளர் அஜய் குமார், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) புதியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய சூரிய சக்திக் கழகத்தின் (SECI) தலைவரும் அதன் நிர்வாக இயக்குநருமான இராமேஷ்வர் பிரசாத் குப்தாவை, அவரது பதவிக் காலம் முடிவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே இந்திய அரசாங்கம் பதவி நீக்கியுள்ளது.
- டொமினிகன் குடியரசில் நடைபெற்ற உலக சட்ட மாநாட்டில், உலக நீதிபதிகள் சங்கத்தின் (WJA) மதிப்பு மிக்க 'மெடல் ஆஃப் ஹானர்' விருதைப் பெற்ற முதல் இந்திய வழக்கறிஞர் புவன் ரிபு ஆவார்.
- எலோன் மஸ்க்கின் ஸ்டார்லிங்க் நிறுவனமானது, இந்தியாவில் அதன் செயற்கைக் கோள் வழியிலான இணையச் சேவைகளை இயக்குவதற்காக தொலைத்தொடர்புத் துறையிடம்மிருந்து (DoT) உறுதிப்பாட்டு ஆவணத்தினை (Letter of Intent) பெற்றுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பெண்களுக்கான நலத்திட்டங்கள்

- சமீபத்தில் அறிவிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை ஆனது பெண்களின் உரிமைகளுக்கு வழி வகுத்தது.
- 'மகளிர் விடியல் பயணம் திட்டம்' ஆனது, முதலமைச்சர் பிறப்பித்த முதல் ஐந்து உத்தரவுகளில் ஒன்றாகும்.
- இந்தத் திட்டத்தின் காரணமாக, பெண்கள் ஒவ்வொருவரும் மாதத்திற்கு 888 ரூபாய் வரை சேமிக்கும் வாய்ப்பினை பெற்றனர்.
- இதுவரை, 1.15 கோடி பெண்கள் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தின் கீழ் மாதத்திற்கு 1,000 ரூபாயினை நேரடியாக தங்கள் வங்கிக் கணக்குகளில் இதில் பெற்று வருகின்றனர்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுமிகளுக்கு உதவுவதற்காக என்று, 'புதுமைப் பெண் திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் அவர்களுக்கு 1000 ரூபாய் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் காரணமாக, பள்ளியிலிருந்து கல்லூரிகளில் சேரும் பெண்களின் எண்ணிக்கை 34% அதிகரித்துள்ளது.
- தற்போது வரையில், பணி புரியும் பெண்களுக்கான 1,303 படுக்கைகள் கொண்ட 13 'தோழி விடுதிகள்' செயல்பாட்டில் உள்ளன.
- மாநில அரசு மேற்கொண்ட பிற முன்னெடுப்புகள்:
    - சுய உதவிக்கு ழுக்களில் பெண்களுக்கான கடன் வரம்பு அதிகரிப்பு,
    - அரசு வேலைகளில் பெண்களுக்கு 40% இடஒதுக்கீடு,
    - மகப்பேறு விடுப்பு கால அளவு அதிகரிப்பு,
    - தமிழ்நாடு புத்தொழில் நிறுவன முதன்மை நிதி வழங்கும் திட்டம் மற்றும்

- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு.




## பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கு

- கோயம்புத்தூரில் உள்ள மகிளா நீதிமன்றமானது, 2019 ஆம் ஆண்டு பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது நபர்களையும் குற்றவாளிகளாக தீர்ப்பளித்து அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்தது.
- 9 பேருக்கும் "சாகும் வரை ஆயுள் தண்டனை" விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட எட்டு பேருக்கும் 85 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
- நீதிமன்றமானது அவர்களுக்கு 3 முதல் 10 ஆண்டுகள் வரையிலான காலக் கட்டத்தில் வெவ்வேறு கால சிறைத் தண்டனைகளையும் வழங்கியது.
- ஒவ்வொருவர் மீதும், 376D (கூட்டுப் பலாத்காரம்) மற்றும் 376(2)(n) (ஒரே பெண்ணை மீண்டும் மீண்டும் பாலியல் பலாத்காரம் செய்தல்) ஆகிய பிரிவுகள் உட்பட இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கடுமையான விதிகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- மத்தியப் புலனாய்வுப் பிரிவானது, அந்த ஒன்பது குற்றவாளிகளுக்கும் எதிராக IPC சட்டத்தின் 120 (B), 342, 354, 354 (B), 366, 376 (D), மற்றும் 376 (2) (N) பிரிவுகளையும் செயல் படுத்தியது.
- இந்த இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் சேர்த்து குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்பதோடு, இது ஆயுள் தண்டனையாகவும் நீட்டிக்கப் படலாம்.
- இந்த வழக்கு முதலில் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் குற்றப் பிரிவு - குற்றப் புலனாய்வுத் துறைக்கும் (CB-CID) பின்னர் மத்தியப் புலனாய்வுத் துறைக்கும் மாற்றப் பட்டது.
- ஆயுள் தண்டனை என்பது ஒரு குற்றவாளி அவரது வாழ்காலம் முழுவதும் சிறை வாசம் பெறுவதைக் குறிக்கிறது என்று இந்தத் தண்டனை குறித்து நிலவிய தவறான கருத்தை நீக்கி உச்ச நீதிமன்றம் முன்னதாக தீர்ப்பளித்துள்ளது.
- தண்டனைக் குறைப்பின் கீழ், ஒரு தகுதி வாய்ந்த அரசாங்கம் ஆனது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் தண்டனைக் காலத்தை 14 ஆண்டுகளுக்கும் கீழ் குறைக்க முடியாது.
- மகளிர் (மகிளா) நீதிமன்றம் என்று அழைக்கப்படும் இந்தச் சிறப்பு நீதிமன்றம் ஆனது 2002 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

- பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக பிற சமூக நலச் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை மிக விரைவாக விசாரித்து தீர்ப்பளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு பெண் நீதிபதி தலைமையில் இயங்கும் இந்த நீதிமன்றம், பெண் வழக்கறிஞர்கள், எழுத்தர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளை உள்ளடக்கியது.



JUDGMENT DAY: An accused being brought to Coimbatore district mahila court ahead of the verdict in the Pollachi gang rape case on Tuesday

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் புதிய பாதுகாப்புக் கோட்பாடு




- சிந்தூர் நடவடிக்கையானது, இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக் கோட்பாட்டில் உள்ள "புதிய இயல்பு நிலை - (new normal)" என்ற நெருக்கடிக்கு முந்தைய அல்லது இயல்பான நிலையினை வரையறுத்துள்ளதாகப் பிரதமர் அறிவித்தார்.
- சிந்தூர் நடவடிக்கையானது, தீவிரவாதத்திற்கு எதிரான அப்போராட்டத்தில் ஒரு புதிய

வகை அளவுருவினை உருவாக்கியுள்ளதோடு, ஒரு புதிய அளவுருவினையும் புதிய இயல்பையும் நிறுவியுள்ளது.

- இந்தியா மீது தீவிரவாதத் தாக்குதல் நடந்தால், தீவிரவாதத்தின் தோற்றுரு தோன்றும் ஒவ்வொரு இடத்திலும் நமது நாடு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.
- அணு ஆயுத அச்சுறுத்தலின் பேரின் கீழ் அதிகரித்து வரும் தீவிரவாத மறைவிடங்களை இந்தியா துல்லியமாகவும் தீர்க்கமாகவும் தாக்கும்.
- மூன்றாவதாக, தீவிரவாதத்தினை ஆதரிக்கும் ஒரு அரசாங்கத்தையும் தீவிரவாதத்தின் சூத்திரதாரிகளையும் இந்தியா வேறுபடுத்தி பார்க்காது.

## 52வது இந்தியத் தலைமை நீதிபதி

- நீதிபதி பூஷண் இராமகிருஷ்ணன் கவாய் இந்தியாவின் தலைமை நீதிபதியாக (CJI) பதவியேற்றார்.
- இந்தியத் தலைமை நீதிபதியாக பதவியேற்ற முதல் பௌத்த மதத்தைச் சேர்ந்தவரும், பட்டியலிடப்பட்ட சாதியினர் சமூகத்திலிருந்து இந்தப் பதவியில் பொறுப்பேற்ற ஒரு இரண்டாவது நீதிபதியும் இவரே ஆவார்.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் தேதியன்று ஓய்வு பெறும் வரையில் அவர் இந்தியத் தலைமை நீதிபதியாகப் பணியாற்றுவார்.
- நீதிபதி கவாய், பல மாநிலங்களின் ஆளுநராகப் பதவி வகித்த பிரபல அரசியல்வாதி R.S. கவாயின் மகன் ஆவார்.



## NEP கொள்கை குறித்து SC தீர்ப்பு 2025


- மும்மொழிக் கொள்கை உட்பட, 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையினை (NEP) செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு, கேரளா மற்றும் மேற்கு வங்காள அரசுகளுக்கு உத்தரவிடக் கோரிய மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- ஒரு குறிப்பிட்ட கொள்கையை ஏற்றுக் கொள்ளுமாறு மாநில அரசுகளைக் கட்டாயப் படுத்த முடியாது என்றும் நீதிமன்றம் கூறியது.
- இந்திய அரசியலமைப்பின் 32வது சரத்து மூலம், குடிமக்களின் அடிப்படை உரிமைகள்

பாதுகாக்கப் படுவதை உறுதி செய்வதற்கான முக்கிய உத்தரவுகளை மட்டுமே உச்ச நீதிமன்றம் பிறப்பிக்க முடியும் எனவும் கூறியது.




## சர்வதேசச் செய்திகள்

### 25 மிகவும் அருகி வரும் முதனி தொகுதி விலங்கினங்கள்




- 'Primates in Peril: The World's 25 Most Endangered Primates 2023–2025' என்ற தலைப்பிலான அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது IUCN, Bristol Zoological Society, மற்றும் the Conservation International ஆகியோரால்

வெளியிடப் பட்டது.

- உலகின் மிகவும் அருகி வரும் 25 முதனி தொகுதி விலங்கினங்களில் ஆப்பிரிக்காவில் இருந்து ஆறு இனங்கள், மடகாஸ்கரில் இருந்து நான்கு, ஆசியாவிலிருந்து ஒன்பது மற்றும் நியோட்ரோபிக்ஸ் (தென் அமெரிக்கா) பகுதியிலிருந்து ஆறு என்ற அளவில் இதில் அடங்கும்.
- இந்த 25 இனங்களில், இந்தோனேசியா மற்றும் மடகாஸ்கர் ஆகிய இரண்டு பகுதிகளும் சேர்த்து நான்கு இனங்களையும், சீனா, நைஜீரியா மற்றும் வியட்நாம் ஆகியவை மூன்று இனங்களையும், பிரேசில், மலேசியா மற்றும் தான்சானியா ஆகியவை இரண்டு இனங்களையும் கொண்டுள்ளன.
- பெனின், பொலிவியா, புருனே, கேமரூன், கொலம்பியா, கோஸ்டாரிகா, காங்கோ ஜனநாயக குடியரசு, லாவோஸ் PDR, மியான்மர், பனாமா, பெரு, சிங்கப்பூர், டோகோ மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளில் தலா ஒரு இனமும் உள்ளன.
- வடகிழக்கு இந்தியா மற்றும் வங்காளதேசத்தில் காணப்படும் இரண்டு முதனி தொகுதி விலங்கினங்கள் (ஃபைரின் இலைக் குரங்கு மற்றும் மேற்கத்திய ஹூலாக் கிப்பன்) இறுதிப் பட்டியலுக்கு பரிசீலிக்கப்பட்ட இனங்களில் அடங்கும்.
- ஃபைரின் இலைக் குரங்கு (டிராச்சிபிதேகஸ் ஃபைரி), மிகக் குறைவாக ஆய்வு செய்யப் பட்ட ஆசிய மந்தி இனங்கள் அல்லது இலை உண்ணும் குரங்குகளில் ஒன்றாகும்.
- இது கிழக்கு வங்காளதேசம், வடகிழக்கு இந்தியா மற்றும் மேற்கு மியான்மர் போன்ற பகுதிகளில் மட்டுமே காணப்படுவதாக சமீபத்தில் வரையறுக்கப்பட்டது.
- மேற்கத்திய ஹூலாக் கிப்பன் (ஹூலாக் ஹூலாக்), 20 வகையான கிப்பன்களில் ஒன்றாகும், மேலும் இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அருகி வரும் இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.

## உலகின் மிகவும் மாசுபட்ட நாடுகள் 2024-25

**World's most polluted countries & regions**

Most polluted country and region ranking based on annual average PM2.5 concentration (μg/m³)

PM2.5 legend

| 0-5 | 5.1-10 | 10.1-15 | 15.1-25 | 25.1-35 | 35.1-50 | >50.1 |
|---|---|---|---|---|---|---|
| Meets WHO guideline | Exceeds by 1 to 2 times | Exceeds by 2 to 3 times | Exceeds by 3 to 5 times | Exceeds by 5 to 7 times | Exceeds by 7 to 10 times | Exceeds by over 10 times |

| Rank | Country/Region | 2024 | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 | Population |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Chad | 91.8 | – | 89.7 | 75.9 | – | – | – | 17,179,740 |
| 2 | Bangladesh | 78 | 79.9 | 65.8 | 76.9 | 77.1 | 83.3 | 97.1 | 169,356,251 |
| 3 | Pakistan | 73.7 | 73.7 | 70.9 | 66.8 | 59 | 65.8 | 74.3 | 231,402,117 |
| 4 | Democratic Republic of the Congo | 58.2 | 40.8 | 15.5 | – | – | 32.1 | – | 95,894,118 |
| 5 | India | 50.6 | 54.4 | 53.3 | 58.1 | 51.9 | 58.1 | 72.5 | 1,407,563,842 |

- 2024–25 ஆம் ஆண்டு IQAir அறிக்கையின்படி, உலகின் மிகவும் மாசுபட்ட நாடுகளின் பட்டியலில் தெற்காசியா தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகிறது.
- இந்தப் பட்டியலில் சாட் முதலிடத்திலும், வங்காளதேசம் இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் மூன்றாவது இடத்திலும், இந்தியா ஐந்தாவது இடத்திலும் உள்ளன.
- ஐஸ்லாந்து, பின்லாந்து மற்றும் சுவீடன் உள்ளிட்ட நார்டிக் நாடுகள் முதன்மையாக தூய்மையான நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.


- 2024 ஆம் ஆண்டில் குறைவாக மாசுபட்ட நாடுகளின் பட்டியலில் பஹாமாஸ் முதல் இடத்தில் உள்ளது.
- தெற்கு அரைக்கோளத்தில், நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவும் குறைவாக மாசு பட்ட நாடுகளில் இடம் பெற்றுள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 2025 ஆம் ஆண்டில் உலகளாவியச் செவிலியர்களின் நிலை

- உலக சுகாதார அமைப்பின் உலக செவிலியர்களின் நிலை குறித்த 2025 ஆம் ஆண்டு அறிக்கையானது, செவிலிய பணியாளர் வளம் குறித்த மிகவும் விரிவான மற்றும் புதுப்பித்த பகுப்பாய்வை வழங்குகிறது.
- 2018 ஆம் ஆண்டில் சுமார் 27.9 மில்லியனாக இருந்த உலகளாவியச் செவிலியப் பணியாளர்களின் எண்ணிக்கையானது 2023 ஆம் ஆண்டில் சுமார் 29.8 மில்லியனாக அதிகரித்தது.
- ஆனால் சுமார் 78% செவிலியர்கள் உலக மக்கள்தொகையில் 49% பங்கினை மட்டுமே கொண்டுள்ள நாடுகளில் உள்ளனர்.
- ஐரோப்பாவில் ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதிகளை விட ஐந்து மடங்கு அதிகமான செவிலியர்கள் உள்ளதுடன், உலகளாவியச் செவிலியர்-மக்கள் தொகை விகிதம் 10,000க்கு 37.1 ஆக உள்ளது.
- இந்த விகிதமானது மிக அதிக வருமானம் கொண்ட நாடுகளில் குறைவான வருமானம் கொண்ட நாடுகளை விட 10 மடங்கு அதிகமாக உள்ளது.
- உலகளவில் 7 செவிலியர்களில் 1 பேர் வெளிநாட்டில் பிறந்தவர்கள் ஆவர்.
- இந்தியாவில், உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்த 1,000 பேருக்கு 3 செவிலியர் என்ற விகிதத்தை விட மிகக் குறைவாக 1,000 பேருக்கு 1.9 செவிலியர்கள் மட்டுமே உள்ளனர்.
- இந்தியாவில் 3.3 மில்லியனுக்கும் அதிகமான செவிலியர்கள் இந்தியச் செவிலியர் சபையில் (INC) பதிவு செய்துள்ளனர்.

Figure 5.1 Proportion of nursing headcount within each occupation group, by WHO region




# மாநிலச் செய்திகள்

## D3 திட்டம் - மத்தியப் பிரதேசம்

- மேற்கு மத்தியப் பிரதேசத்தின் ஜபுவா மற்றும் அலிராஜ்பூர் ஆகிய மாவட்டங்களில் பீல்

மற்றும் பிலாலா பழங்குடியினர் அதிகம் வாழும் இடங்களில் D3 திட்டம் எனும் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ திருமணங்களில் தஹேஜ் (வரதட்சணை), தாரூ (மது) மற்றும் DJ இசை போன்ற 3D விவகாரங்களுக்குச் செலவிடுவதற்காக என தனியார் கடன் வழங்குபவர்களின் கடன் நெருக்கடி வலையில் சிக்குவதிலிருந்து இந்த ஏழைப் பழங்குடியினக் குடும்பங்களைக் காப்பாற்றுவதே இதன் நோக்கமாகும்.

❖ முன்னதாக, மிக ஏழ்மையான குடும்பங்கள் கூட வரதட்சணை, மதுபானம் மற்றும் DJ இசைக்காக 1 லட்சம் முதல் 5 லட்சம் ரூபாய் வரை செலவிட வேண்டியிருந்தது.

❖ அவர்கள் இந்த அதிகச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல், உள்ளூர்ப் பணக் கடன் வழங்குபவர்களின் நெருக்கடியில் சிக்கினர்.

**Mission D3**

A grassroots social campaign led by Bhil and Bhilala tribal youths to cleanse tribal marriages of 3Ds: Dahej (Dowry), Daroo (Liquor), and DJ music.

**Aim:**

To promote simple, debt-free weddings and prevent financial exploitation of poor tribal families.

To curb the cycle of debt and migration post-marriage.

**Key Features:**

- **Community-driven:** Initiated by activist Nitesh Alawa and supported by local leaders, police, and MLAs.
- **Rapid adoption:** Spread across Jhabua and Alirajpur with visible support from elected officials and traditional musicians
- **Social impact:** Families now save ₹1-5 lakh otherwise spent on unnecessary customs, preventing reliance on moneylenders

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★